# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.newuthayan.com e-mail: advt@uthayan.com T.P: 021 493 1111

இதழ் - 03 மாதம் - ஆடி 20 ஆண்டு - ஏவிளம்பி (2017) திகதி: 05.08.2017


# தமிழ் கடவுள் தமிழ் ஏடு 2017





## German Institute

German, Netherland, Swiss, Ostriya நாடுகளுக்கான Dautsch மற்றும் Dutch மொழிகள்




Embassy யின் Exam இற்கு ஏற்றவாறு.

தமிழ் மொழிபெயர்ப்புடன் 10 வருடகாலமாக நடைபெறும் ஒரே ஒரு Institute

ஜேர்மனியில் இருந்து வருகை தந்த ஆசிரியை

Mrs. P. Kajenthini

# 10, Palaly Road, Jaffna.

077 160 4823

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்த நாடு

கே.எஸ்.சிவஞானராஜா

நல்லூர் கொடியேற நமக்கு
நல்லபடி வாழ்வுயரும் நூல்
வல்லோர் வகுத்த தெல்லாம்
வரமாகத் தினங்கிடைக்கும்
எல்லோரும் விழுந்து வணங்க
எதிரிகள் பறந்தோடுவர் எதுவும்
இல்லாதோர் என இனியாருமில்லை
இனி நமக்கொரு கவலையுமில்லை

தவத்திரு யோகர் சுவாமிகளும், தவமுனிவர் செல்லப்பா சுவாமிகளும் முருகனோடு ஆடிப் பாடி கூடி நாடி வாடி ஓடி மகிழும் அற்புதமே நல்லூர் ஆகும். இதனாலேயே அந்த மண்ணில் கால்பட்டாலே ஒவ்வொரு வீட்டிலும் ஏதோவொரு அற்புதம் நடந்தே தீருகிறது. இஃது முழுவதும் உண்மையே.


"நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்
செல்லாதே வெறுங்கையாய்ச்
செல்லப்பன் வாழ்ந்த நாடு
தேங்காயுடன் பழங்கொண்டு நீ செல்லு

வாடியுன்மனம் ஓடினாலும் வருத்தங்கள்
கோடி கோடியாகக் கூடினாலும்
குறைகள் வந்து தேடியுன்னை மூடினாலும்
செல்லப்பன் பாதம் சிந்தித்தால் ஓடியோடிப்போமே
பெண்டு பிள்ளைகள் என்று பேதமை கொண்டு
நீ கண்ட கண்ட இடங்கலங்கி நீ திரியாதே"


யோகிகளும், சித்தர்களும், ஞானிகளும், முனிவர்களும் முருகப் பெருமானோடு ஒன்றித்து வாழ்ந்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்ற புண்ணிய திருப்பதியே நல்லூர் ஆகும். குமாரசாமி முதலியார் கவித்திரட்டில் உயிரோடமைந்த ஒரு பாடலில்,

"அல்லற் பழனங்கள் சூழ் நல்லை நாதனை
வந்தடைந்தோர்க்கு
இல்லைப் பிரம்மக் குயவன் வனைவதற்கு
ஏதுக்களே"

என்று நல்லூர் முருகனை நம்பிக்கையோடு சரண்புகுந்து வழி படுவோர்க்கு படைப்புக்கு அதிபதியான பிரம்மதேவன் அவர் களை மீண்டும் படைக்க வேண்டிய தேவை கிடையவே கிடை யாது என்று கூறப்படுகிறது. இத்தகு முருகனிடம் நாம் வெறு மனே வெறுங்கை யோடு சென்று வழிபடுவது ஆகவேயாகாது. பழம், பாக்கு வெற்றிலை, தேங்காய், மாம்பழம், பலாப்பழம், இன்னும் வெவ்வேறு பழங்கள், பால், கற்கண்டு, தேன், சக்கரை, கரும்பு என யாவுமே முருகனுக்கு அரப்பணிக்க முடியும். இப்பொழுது நாம் கைகளில் பற்றுச்சீட்டு ஒருபுறம் இருக்க எந்தவொரு உபகாரங்களுமின்றி இலேசாக முருகனோடு கதைப்பதற்கு ஆவன புரிகின்றோம். இது சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும். முருகன் சாப்பிடுகிறாரோ இல்லையோ என்பது முக்கியமல்ல. அவர் மனமும், அவர் மணமும், அவர் கடாட்சமும் நாம் கொடுக்கும் அத்தனை நைவேத்தியப் பிரசாதங்களையும் இறைவனான முருகப்பெருமானின் சந்நிதியிலே அருட்பார்வை ஆட்கொண்டு தெய்வீகவல்லமையாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இத்தகுத் தாற்பரியத்தினால் தான் பிரசாதங்களின் சுவை இரட்டிப்பானதாக இருக்கின்ற உண்மையை ஒத்துக்கொள்கின்றோம். எனவே பெருமானுக்குக் கொடியேறும் நாள்தொடக்கம் பெருமான் தீர்த்தமாடும் வரையில் பொருத்தமான ஒரு நாளிலாவது தேங்காய், இளநீர், தீங்கனி கொண்டு திருவடித்தொண்டு யாம் செய்தேயாக வேண்டும். பூக்கள், மாலைகள், திருநீறு, பால், பழம், தயிர், நெய், இவற்றோடு திருமுறைப் பாராயணம், பஜனை உபந்நியாசம், கதாப்பிரசங்கம் கூடவே கூட்டுதல், கழுவுதல், துப்புரவாக்குதல், மௌனமாயிருத்தல் ஆகிய அனைத்தையுமே நாம் முருகனுக்காய் அர்ப்பணித்தேயாகவேண்டும். இல்லாவிடின் யாம் சைவசமயி அல்ல. மாறாக ஒரு பார்வையாளராகவே கருதப்படுவோம். யோகர் சுவாமிகள் பாடிய நற்சிந்தனைப் பாடல்கள் அனைத்திலுமே நாம் நடந்துகொள்ள வேண்டிய வாழ்க்கை முறைகள் தெளிவின் பொதிவாய் உணரவைக்கப் பட்டுள்ளது.
நல்லமருந்தொரு குருமருந்தை நான் நல்லூரிற் கண்டேனே

*எல்லையில்லாப் பிணி தீர்க்கு மருந்து*
*இம்மை மறுமைக்கு மேற்ற மருந்து*
*இல்லையெனாது கொடுக்கும் மருந்து*
*ஏழையடியார்க்கு இரங்கும் மருந்து*

*வல்லவன் செல்லப்பன் தந்த மருந்து*
*வாழ்த்தும் கணபதிக்கு வந்த மருந்து*
*புல்லர்கள் கண்டும் புசியா மருந்து*
*புண்ணியன் யோகன் புசிக்கு மருந்து*

ஆமாம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஏற்படுகின்ற பிறவிப் பிணிக்கும் நோய் நொடிக்கும் ஏற்ற மருந்து நல்லூரிலேயே உற்பவிக்கிறது. ஆதலால் வெறுங்கையாடு ஒய்யாரமாக, நாகரீகமாக, நளினமாக, ஆடை அலங்கார நறுமண மேனி அழகு மிளிரவும், ஒளிரவும், குளிரவும் ஆலயத்தில் வெளிவருவதும் உலாவருவதும் ஆரோக்கிய மானதல்ல.

**வரலாறு**

கி.பி.948 ஆண்டு காலப்பகுதியில் முதலாவது நல்லூர் ஆலயம் கட்டப்பட்டதென ஒரு தகவல்.
கலிங்கச் சக்கரவர்த்தி தனது மந்திரி புவனேகபாகுவின் உதவியோடு யாழ்.நகர் நல்லூரில் முருகன் ஆலயத்தைக் கட்டுவித்தான் என்பது இன்னுமொரு தகவல் கி.பி.1248ஆம் ஆண்டு ஆலயம் மீண்டும் கட்டப்பட்டதாகவும் மீண்டும் கி.பி.1450ஆம் ஆண்டிலும் ஆலயம் புதிதாகக் கட்டப்பட்டதெனவும், 1591ஆம் ஆண்டில் ஏற்பட்ட படையெடுப்பின் காரணமாக ஆலயம் டிமென் டொன்சா என்பவனால் தகர்க்கப்பட்டு கோட்டையும் வீடுகளும் கட்டப்பட்டது. போர்த்துக்கேயரின் ஆட்சிக்குப் பின்னர் கி.பி.1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஆட்சியை நிலைநாட்டிய போது சைவ சமயிகளின் பயம் நீங்கவே சுதந்திரமாக வழிபட வழியும் வாழ்வும் ஏற்பட்டது. மூலாதாரமாக அர்ச்சனை புரிந்து வந்த பரம்பரை அந்தணப்பெருமகனாகிய பிராமனோத்தமர் கிருஷ்ணய்யர் சுப்பையர் என்ற பெருமகனார் முன்னர் கோயில் இருந்த இடத்திற்கு அருகில் மடாலயம் ஒன்றை நிறுவினார். அதிலே வேலினைப்பிரதிஷ்டை செய்து வழிபட ஆவனபுரிந்தார். 1734ஆம் ஆண்டில் இரகு நாத மாப்பான முதலியாரால் கல்லினாலும் செங்கல்லினாலும் நல்லூர் கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டதெனவும் ஆவணங்கள் சான்று பகர்கிறது. மேலும் 1739ஆம் ஆண்டில் கிருஷ் ணனைய சுப்பையரும், சைவ சமய அபிமானிகளும் ஒல்லாந்த மேலதிகாரிகளிடம் விண்ணப்பித்த தன் பேரில் உரிய அனுமதியோடு கந்தசுவாமி கோயில் நல்லூரில் கட்டப்பட்டதாக வரலாற்றைக் கோடிடுகிறார்கள். இன்னுமொரு தகவலின் பிரகாரம் இந்தக் கோயில் ஆதனம் அம்பலவாணர் கந்தப்பச் செட்டியாரின் பெயரில் பதியப்பட்டிருப்பதாகப் புரவலர் செ.இராசநாயகம் குறிப்பிடுகின்றார். குருக்கள் வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இடத்திலே நிரந்தரமாக நிறுவுவதற்கு மாப்பான முதலி யார் அவர்களே பெரிதும் உபகாரமும் உதவியும் புரிந்திருக் கின்றார். தற்போதைய புனித இடத்துக்கு வித்திட்டவரும், வழி கோலியவதும், கோவிலாகப் பேறாக்கியவரும் மாப்பான முதலி யாரே ஆவார்.

கிருஷ்ணஐயரும், இரகுநாத மாப்பான முதலி யாரும் அரும்பெரும் தொண்டு புரிந்துள்ளனர்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் முதல் பூசகராக விளங்கியவர். சிவஸ்ரீ சுப்பையாரே ஆவார். அதேபோல கோயிலின் அதீத வளர்ச்சிக்கு அன்றும், இன்றும், என்றும் விளங்குபவர்களுள் இரகுநாத மாப்பாண பரம்பரையினரும் உள்ளடங்குகின்றனர். ஆங்கிலேய அரசுகள் இவர்களுக்கு உரிய கௌரவம் அளித் திருந்தமை இங்கு நோக்கத்தக்கதாகும்.

**கட்டியம் கூறல்**

ஸ்ரீ கஜவல்லி மகாவல்லி சமேத சுப்பிரமணிய பாதார விந்த ஜனாதி ரூடாசோடச மகாதான சூர்ய வம்சோபவத் ஸ்ரீ சங்க போதி புவனேகபாகு என சுவாமி எழுந்தருளும் போது கட்டியம் கூறப்படுகிறது. 1450ஆம் ஆண்டு தொடக்கம் 1467ஆம் ஆண்டு காலப் பகுதி நல்லூரின் வரலாற்றுக் கான முக்கிய களம் எனக்கூற முடியும்.

**இன்று**

அலங்காரக் கந்தன் எனப் போற்றப்படும் நல்லூரான் முரு கனுக்கு வானோங்கிய கோபுரங்கள் மூன்று. நெடி துயர்ந்த மணிக்கோபுரங்கள் அப்பப்பா தெய்வீகம் பரவும் தூபிகள் மாட விதான பீடங்கள், கண்கவர் வசந்த மண்டபம், எழில் தரு அழ கோவியக் கூரைகள், நீராடவும் தீர்த்த மாடவுமான விசாலமான தீர்த்தக் கேணி, தங்கம் பளிச்சிடும் ஆபரணங்களோடு கூடிய எழுந்தருளி உயிரோட்டான வாகனக் கூட்டங்கள், நேரந்தவ றாத பூஜைகள், மந்திரங்களைச் சுந்தரமாக்கும் அந்தணப் பெருமக்கள், அழகொழுகு தங்க நிறச் சித்திரரதம், உலகிலேயே பெரிய சப்பைரதம், விஞ்சு மணல் கொஞ்சும் பஞ்சு மணல் பெரு வீதிகள், சாமான்ய மக்களும் முருகனோடு வாழ்வதற்காக ஒரு ரூபா வரமும் அற்புதமும், ஆண்டியும் அரசனும் சமமாக வழி படும் பெரும் பேறும் எவருக்கும் அழைப் பிதழ் இல்லாத புண் ணியமும், யாருக்குமே வரவேற்பும் விசேடிப்பும் இல்லாத பெருங்கருணை மேலங்கி போர்வை இல்லாத வழி பாட்டுச் சிறப்பும், இருபத்தைந்து நாள் திருவிழாக்களும், திருமுறை நாத கீத சுருதி லய ஓங்கார வேத மந்திர ஒலிப்பிரவாகமும் சைவச மயத்தின் பேறாக வணங்கப்படுகிறது.

“ஏற்போர் தாம் வந்திச்சையின் மகிழ்வோடு
வாய்ப்பாய் வாழும் பொற்பரை நெடுமதில்
யாழ்ப்பாணாயன் பட்டின மருவிய பெருமாளே”

என்று அருணகிரியார் நல்லூரானைப் பாதம் பணிகின்றார். தவத் திரு யோகர் சுவாமிகளும்

எந்நாளும் நல்லூரரை வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே.
அந்தநாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு.
வேதாந்த சித்தாந்தம் கற்றதனால் என்ன
வேடிக்கைக் கதைகள் பேசினால் என்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டாலென்ன
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியம் தெரியும் நிபுணர்
பக்தி செய் உத்தமர் பரவும் நல்லூரில்
நித்தியம் வந்து பார்த்தால் முத்தி நிச்சயமே

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம் நல்லூர். ஆனபடி யினால் அதிசயங்களும் அற்புதங்களும் நித்தமும் நடக்கிறது.

**ஒரு ரூபா**

கோடியும் வேண்டாம். இலட்சமும் வேண்டாம்.
மாடியில் இருக்கும் ஆயிரமும் வேண்டாம்.
தேடியே வைத்த தேட்டமும் வேண்டாம்
நாடியே அங்கே தடவிப்பார். ஒருரூபா போதும்


ஆம், ஒரு ரூபா இருந்தால் முருகனோடு வாழலாம். கோடி செல வழித்து ஓடி ஓடி வருகிறார்கள். ஏனென்றால் நல்லூர் முருகனி டம் மருந்தும் உண்டு. சௌபாக்கிய சுகமும் உண்டு. கொடி யேறக் குடிஉயரும். குடிஉயர மடி நிறையும். மடி நிறையப் படி கிடைக்கும், இவையனைத்திற்கும் ஒரு ரூபா போதும் அது வொன்றே இனிதாய் எமக்குப் பஞ்சாமிர்தமாகும். நல்லூர் எப் போதுமே தன்னை விளம்பரப்படுத்தியதேயில்லை அதுதான் கோயில். ■




Lanka Nutri Care
Colombo-14.
T.P: 0113094 914
ஏக விநியோகஸ்தர்:
ஜெகன் பார்மசி
462/B, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4336


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா, மற்றும் முல்லைத்தீவு IELTS Exam Centre



கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

*Now prepare for your*

# IELTS

*Do the exam at British College*

**Next exam date in Jaffna. 30.09.2017**

idp www. idp.com/srilanka

திருமணம் முடித்து பிரித்தானியாவுக்கு
**SPOUSE** விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு

**IELTS Life Skills A1 B1**

Audio, Video மற்றும் Multi Media பயன்பாட்டுடனான...

## சர்வதேச மொழிக் கற்கை நெறிகள்

நெதர்லாந்து மொழிப் பாடநெறி **DUTCH**

நெதர்லாந்து மொழிப் பாடநெறியை Dutch பட்டதாரி ஆசிரியையிடம் கற்று ஒரே தடவையில் 3 பரீட்சையினையும் சித்தியடையவதற்கு..

ஜெர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி **Deutsch**

Grammar, Vocabulary விருத்தியுடனான Speaking, Listening, Reading, Writing ஆகியவற்றில் மேலதிக பயிற்சியளிக்கப்பட்டு பரீட்சைக்கு ஒழுங்கு செய்யப்படும்

பிரான்ஸ் மொழிப் பாடநெறி **FRENCH**

சிறந்த விரிவுரையாளரைக் கொண்டு பாடநெறி நடாத்தப் படுவதுடன் பாடநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

**Diploma in Spoken English**

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.

**BRITISH COLLEGE OF EDUCATION**

IELTS பரீட்சை நிலையம்

**HOT LINE : 0777-596148**

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd. Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. 13, 1st chepal Rd, Colombo-06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

After A/L's Join

PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka

UTP University Transfer Program






*Source : https://degreecoursefinder.pearson.com/

Pearson BTEC | UNIVERSITY OF WOLVERHAMPTON | RICS

UGC Recognized TVEC Approved

**ENGINEERING**
CIVIL ENGINEERING
ELECTRICAL ENGINEERING
ELECTRONICS ENGINEERING

**MANAGEMENT**
BUSINESS MANAGEMENT
MARKETING
HUMAN RESOURCE MANAGEMENT

**BIOMEDICAL SCIENCE**

**QUANTITY SURVEYING**

**COMPUTING**
NETWORK ENGINEERING
SOFTWARE ENGINEERING
APPLICATIONS DEVELOPMENT

*BA (Hons) / BSc (Hons) / BEng (Hons)*

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Sanchu 0777 102 131
Ragavan 0777 692 318

INTAKE NOW ON

19 YEARS of Trust & Excellence in Higher Education

BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna
BCAS Corporate Office, #. 32, Dharmarama Road, Colombo - 06



Best Employer Brand Award 2017 | No.1 BTEC Centre in Sri Lanka 2016 | Best Academic & Industry Interface 2016 | Academic Impact Winner 2016 | No.1 Higher Education Provider 2014 | BTEC Gold Partner 2013 | Performance Excellence Award 2011 | Fastest Growing BTEC Centre 2010

021 221 9910 | 011 255 7217 | info@bcas.lk | www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் புகழ்பூத்த முன்னணி ஆங்கில மொழி பயிற்சிக் கல்லூரியான
# ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில்
# புதிய ஆங்கில டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பமாகின்றன

## இந்த வருடம் A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான...

### DIPLOMA IN ENGLISH LANGUAGE (6 MONTHS)

வட இலங்கையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கற்றுவரும் முதற்தர, ஆங்கில மொழிக்கென்றே தனித்துவ மாக நடத்தப்படும் கல்லூரியில் இணைந்து கற்பதன் மூலம் ஆங்கில மொழியைக் கற்று சரளமாக பேச ஓர் அரிய வாய்ப்பு!!!!!!

### யார் இந்தப் பாடநெறியில் இணைய முடியும்?

- 16 வயதிற்கு மேற்பட்ட அனைவரும்
- O/L, A/L பரீட்சைகளை எழுதி பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்கள்
- பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள், படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள், பட்டதாரி மாணவர்கள் மற்றும் உயர் கல்லூரி மாணவர்கள்.
- வெளிநாட்டில் வேலை புரிய செல்பவர்கள், பட்டப்படிப்பை தொடர இருப்பவர்கள்.
- அலுவலகங்களில் பணிபுரிவோர்
- குடும்ப பெண்கள்
- ஆங்கில ஆசிரியராக வர விரும்புபவர்கள்.
- ஆங்கில டிப்ளோமா சான்றிதழ் மற்றும் சர்வதேச சான்றிதழ்களைப் பெற விரும்புபவர்கள்.

### எமது டிப்ளோமா ஆங்கிலப் பாடநெறியின் சிறப்பம்சங்கள்

- ☑ எம்மிடம் இணையும் அனைவரும் ஆங்கில மொழியில் புலமை பெற்று நிச்சயமாக ஆங்கிலத்தில் சரளமாக கதைக்க முடியும் என்ற உத்தரவாதம்
- ☑ இரண்டு கட்டங்களை உள்ளடக்கிய இந்தப் பாடநெறியில், மாணவர்கள் அடிப்படையில் இருந்து ஆங்கில மொழியைக் கற்று படிப்படியாக முன்னேறி ஆங்கிலத்தில் கடினமான பகுதிவரை கற்று மொழியில் சிறந்த தேர்ச்சி அடைவதுடன் ஆங்கில மொழியினை சரளமாகவும், லாவகமாகவும் பேசுவர்
- ☑ கட்டம் ஒன்றில் (LEVEL I) மாணவர்கள் ஆங்கில மொழியில் சகல கட்டமைப்புகளையும் கற்பதுடன் , தாம் நினைப்பதை வசனம் வசனமாக பேசும் நிலையை அடைவர்.
- ☑ கட்டம் இரண்டில் (LEVEL II) மாணவர்கள் தாம் உருவாக்கிய வசனங்களை பந்தி பந்தியாக பேசுவர்.
- ☑ மொழியின் திறன்களான கேட்டல் (LISTENING) பேசுதல் (SPEAKING) வாசித்தல் (READING) எழுதுதல் (WRITING) என அனைத்துத் திறன்களும் கற்பிக்கப்பட்டு ஒரு மொழியில் இயல், இசை, நாடகம் என்ற பாங்கிற்கு அமைவாக அனைத்துத் துறைகளிலும் தேர்ச்சி மிக்க மாணவர்களாக உருவாக்கப்படுவர்.
- ☑ இப் பாடநெறியைப் பயின்றவர்கள் ஆங்கில மொழியில் சரியான உச்சரிப்பு மற்றும் மொழியில் புலமை பெறுவதுடன் சரளமாகவும் பேசுவர்.
- ☑ ஆங்கிலத்தில் எந்த விதமான நேர்முகத் தேர்வுகள், பரீட்சைகள், மேடைப்பேச்சு, Presentation, கடிதங்கள், கட்டுரைகள் எழுதுதல், கற்பித்தல் என அனைத்திலும் சிறந்த தேர்ச்சி பெற முடியும்.
- ☑ பயிற்சி நெறி முடிவில் ஆங்கில டிப்ளோமா சான்றிதழைப் பெறுவதுடன் உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களான UNIVERSITY OF CAMBRIDGE, CITY & GUILDS (U.K) போன்ற நிறுவனங்களின் சர்வதேச சான்றிதழ்களையும் பெற முடியும்.

### E-CITY கல்லூரியின் ஏனைய பாடநெறிகள்

#### IELTS (INTERNATIONAL ENGLISH LANGUAGE TESTING SYSTEM)

**வெளிநாடுகளில் உயர்கல்வி, தொழில் வாய்ப்பு மற்றும் குடியேற விரும்புபவர்கள் சித்தியடைய வேண்டிய பரீட்சையாகும்.**

ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியானது உயர்ந்த சித்தி வீதங்களை வழங்கி வருவதுடன் BRITISH COUNCIL இன் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவும் உத்தியோகபூர்வ பரீட்சை பதிவுப் பிரதிநிதியாகவும் இருக்கிறது.

#### E-CITY IS AN OFFICIAL IELTS REGISTRATION CENTRE FOR BRITISH COUNCIL

## IELTS LIFE SKILLS A1/B1

- ☑ U.K நாட்டவரை திருமணம் புரிந்தவர்கள் கணவன்/மனைவி (SPOUSE VISA) விசாவில் UK செல்வதற்கான ஆங்கிலப் பரீட்சையாகும்.
- ☑ இலகுவான முறையில் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு 100 வீதம் சித்தி அடைய உத்தரவாதம்.
- ☑ வட இலங்கையில் அதிக மாணவர்களைப் பயிற்றுவித்து 100 % சித்திகளை பெற்றுக் கொடுக்கும் ஒரே கல்லூரி.

**100% PASS RATE**

#### DIPLOMA IN SINHALA LANGUAGE

குறுகிய காலத்தில் மாணவர்கள் சிங்கள மொழியினைப் பயின்று எழுத, வாசிக்கப் பழகுவதுடன் சரளமாக சிங்கள மொழியினைப் பேசும் பாடநெறியாகும்.



## ஆரம்பம்
## 02.09.2017 காலை 8.00 மணி

## E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT

இல.372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)

Website: www.ecitycollege.lk
EMAIL : ecitycollege@gmail.com
Facebook : E-City College of English
Tel : 0212217106 I 0770610271 I 0773400418 I 0774924166

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய

சி.சக்திகிரீவன்

மாயையினதும் காசிப முனிவரதும் புதல்வர்கள் சூரன், சிங்கன், தாரகை ஆகியோர் ஆவர். மார்க் கண்டேயர் சிவபிரானைத் துதித்துப் போற்றிய தால் யமதூதன் மார்க்கண்டேயரை அணுகமுடியாது போய்விட்டது என்றும், இதனால் இயமனே நேரில் மார்க்கண்டேயரின் உயிரைப் பறிக்க வந்ததாயும், எம்பெருமான் சீற்றங்கொண்டு இயமனைக் காலால் உதைத்ததாகவும், இதனால் அவன் இறந்ததாகவும், மார்க்கண்டேயர் அந்தமற்ற ஆயுளைப் பெற்றதாகவும், பின் தேவர்களின் வேண்டுதலுக்கு இரங்கி இயமனுக்கு உயிர்ப்பிச்சை வழங்கியதாகவும் தனது புதல்வர்களுக்குக் கூறிய காசிபர் ஆகையால் நீவீர் சிவபிரானைத் துதித்து நீண்ட ஆயுளைப் பெறுவீர்களாக என்று ஆசீர்வதித்தார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த மாயைக்கு இந்த உபதேசம் பிடிக்கவில்லை. தன் பிள்ளைகளுக்கு காசிப தேவையற்ற உபதேசத்தைச் செய்கிறார் என்று கைதட்டிச் சிரிக்கிறாள்.



மாயை தனது பிள்ளைகளுக்குக் கூறுகிறாள். "உலகில் பெருமை அளிக்கக் கூடியவை கல்வி, செல்வம் எனும் இரண்டே. இவற்றில் செல்வம் கலை ஞானத்தையும், மேன்மையையும் அளிப்பதோடு, அறத்தையும் பொருளையும் கொடுத்துப் புகழையும் ஈட்டுகின்றது. ஆகையால் செல்வமே சிறந்தது. இதனைப் பெற வேண்டில் சிவபிரானை வேண்டி வேள்விகளைச் செய்வீர்களாக" என்றாள்.

இதனைக் கேட்ட சூரன் முதலானோர் மிகுந்த மகிழ்ச்சியோடு ஆயிரத்தெட்டு வேள்விக் குழிகளை அமைத்துத் மூட்டி வேள்வியை மிக விமர்சையாக நடத்துகின்றனர். தீ எழுந்து திக்கெல்லாம் பரவுகின்றது. முனிவர்களும், தேவர்களும் கதிகலங்கி அஞ்சி நடுங்குகின்றார்கள். இறைவனே எழுந்தருளிவராது இருக்கின்றான் எனினும், சூரன் சளைக்கவில்லை. விண்ணிற்குச் செல்கின்றான். தனது உடற் தசைகளை வெட்டி வேள்வித் தீக்குள் வீசுகின்றான். வேள்விச் சாலை அழுகைச் சாலையாக மாறுகின்றது. இந்திரன் முதலான தேவர்கள் அசுரர்களின் வாழ்வு முடிந்துவிட்டது என்று மகிழ்கிறார்கள். சிங்கமுகனே தனது ஆயிரம் தலைகளையும் தன்வாளினால் அரிந்து வேள்விக் குண்டத்துள் இடுகின்றான். எல்லாத் தலைகளும் மீண்டும், மீண்டும் வளர்கின்றன. இறைவன் கிழப்பிராமண வடிவத்தில் மாறு வேடம் பூண்டு வருகின்றான். சூரபன்மன் உயிர்பெற்று எழுகின்றான். இந்த நேரத்தில் சிவபிரான் தனது கிழப்பிராமணக் கோலத்தை மாற்றி இடபாரூடராகக் காட்சியளிக்கிறார். சூரன் முதலானோரின் செய்கையால் சிவபிரான் மனம் நெகிழ்ந்து, வேண்டும் வரம் யாது என்று கேட்கிறார். நாம் அண்டங்கள் அனைத்தையும் ஆள வேண்டும். அவற்றைக் காக்க ஆஞ்ஞா சக்கரத்தைத் தந்து, யாம் என்றும் அழிவின்றி வாழ்வதோடு திருமால் முதலிய தேவரோடு போர் தொடுத்து வெல்லவும் வேண்டும். இதற்கான வரங்களைத் தந்தருளுவீர் என்றான் சூரன்.

இறைவன் சூரனைப் பிருதுவியில் உள்ள ஆயிரம் கோடி அண்டங்களுள் ஆயிரத்தெட்டு அண்டங்களை 108 யுகங்கள் ஆளுக என்று வரம் அருளி இந்திர ஞாலம் என்னும் தேரையும் வழங்குகின்றான். அவ்வண்டங்களைப் பாதுகாக்க ஆஞ்ஞா சக்கரத்தையும் சிங்க வாகனத்தையும் கொடுத்து வானவர்க்கும் மேலவனாய் இருக்கும் தகுதியையும் வழங்குகின்றான். தம்பிமார்கள் இறைவனைத் தொழ நீவிரும் உங்கள் தமையனுக்குத் தோள் போல உதவி வீரத்துடன் 108 யுகங்கள் சிறப்போடு வாழ்க என்றார்.

உங்கள் மூவரையும் நம்முடைய சக்தி ஒன்றே அல்லாமல் வேறுயாவர் வெல்லுவர் என்று அவர்களுக்கு திருவாய் மலர்ந்து அருளினார்.

இதனால் மகிழ்ச்சி கொண்ட சூரன் முதலானோர், செய்யத் தக்கது எது, செய்யத் தகாதது எது என்பது எல்லாம் வீண் கதை என்று கூறி கொலை, களவு, காமம், வஞ்சனை எல்லாவற்றையும் செய்து ஆயிரத்தெட்டு அண்டங்களையும் தமது சேனையோடு சென்று போரிட்டு வென்று ஆட்டிப்படைக்கின்றனர். தேவர்களைச் சிறையில் அடைக்கின்றனர். வானவர்களை அலைகடலில் சென்று மீன்களை அள்ளிவரப் பணிக்கின்றான் சூரன். தேனார் பூஞ்சோலைக் கற்பகத்தின் கீழ் வாழ்ந்த வானோர்கள் மறைகளை மறந்து மிகப் பெரும் துன்பத்தின் கீழ் வாழ்கின்றனர்.

இதனைக் கச்சியப்பர் கந்தபுராணத்தில்

"ஏனம் பசுதான் இரவை மரைப்படுத்த
ஊனும் வடியும் ஒலிகடலில் உள்ள பல
மீனும் சுமந்து விறல் அசுரர்க்கு ஏவல் செய்து
மானம் குலைந்து மறந்தோம் மறைகளுமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மையார் களத்தார் வரம் பெற்ற சூரனுக்குச்
செய்யாத ஏவலெல்லாம் செய்தோம் நெறி நீதி
எய்யாத மானமிவையெல்லாம் தானிழந்தோம்
ஐயா மிகவும் அலுத்தோம் அலுத்தோம்

என்று கதறி அழுகிறார்கள் தேவர்கள். இந்தச் சூரபன்மனின் அரசு எல்லோர்க்கும் துன்பம் தருகின்றது.
தேவர்கள் சிவபிரானைச் சென்றடைந்து சூரனால் பெருந்துயர் அடைகின்றோம். எமது துயர் நீங்க குமரன் ஒருவனை நீத்தல் வேண்டும் என்று வேண்டித் துதிக்கிறார்கள்.

"ஆதியும் நடுவும் ஈனும் அருவமும் உருவும் ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி
வேதமும் கடந்து நின்ற விமல ஓர் குமரன் தன்னை நீதரல் வேண்டும் நின்பால் நின்னைய நிகர்க்க" என்றார்.

கொடிய அசுரரைக் கொன்றொழிக்க ஒரு குமரனைத் தருகின்றோம் என்ற சிவபிரான் திருவாய் மலர்ந்தருளுகின்றார்.
சிவபிரானுடைய ஐந்து முகங்களான ஈசானம், தற்புருசம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் என்கின்றவற்றோடு அதோமுகத்தையும் சேர்த்து நெற்றிக் கண் ஒவ்வொன்றில் இருந்தும் நெருப்புப் பொறிகளைத் தோற்றுவிக்கின்றனர். வாயுதேவனும் அக்கினி தேவனும் கங்கையில் விடுவிக்கின்றனர் கங்கை அவற்றைச் சரவணப்பொய்கையில் சேர்த்து விடுகின்றது. கார்த்திகைப் பெண்கள் பாலமுதம் ஊட்டி வளர்க்கிறார்கள். அனைவரும் திருவிளையாடல்கள் பல புரிகின்றார்கள். அகிலாண்ட கோடி ஈன்ற அன்னை அண்டர் நாகரோடு சென்று சரவணப்பொய்கையில் இறங்கி அம்பிகை கட்டியணைக்க ஆறுமுகமும் பன்னிரு கரமும் கொண்ட ஒரு திருவுருவம் தோன்றி கந்தன் என்ற நாமத்தோடு அவன் அசுரர்களை அழிக்கின்றான். சூரன் முருகப் பெருமானின் வாகனமாக மயிலாகவும் அவன் கொடியாகச் சேவலாகவும் அருள்பெறுகின்றான்.

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி ஆகக்
கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும்
கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய



சூரபன்மன் சிவபிரானிடம் வேண்டி வேள்வி செய்து வரம் பெறுகிறான். அவன் சிவபிரானுக்கு நன்றி இல்லாது தேவர்களைத் துன்புறுத்தியதால் ஆட்சியையே இழக்கும் நிலைக்கு ஆளாகின்றான்.
நாம் என்றும் இறைவனுக்கு நன்றியுள்ளவர்களாக வாழ்வதோடு சிவனடியார்களை முருகனடியார்களைப் பேணுவோமானால் துன்பம் என்ற பேச்சுக்கே இடமில்லாது போகும். துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசை எல்லாம் உனக்கே

பல்லவி

விழாக்கோலம் பூண்ட நல்லூரானே உனைக்
காணக் கண்கோடி வேண்டுமையா

அனுபல்லவி


அழகு சுந்தர முருகனே உன்னில்
அன்னை சேர்த்தெடுத்த சக்தியோ

சரணம்

குழந்தையின் பால்முகம் உன்னிலையா உன்னை
கண்டதும் மெய்மறக்கச் செய்யுதையா
போதையாய் உன்னையே நாடுகின்றோம் எம்மை
பிள்ளைப் பாசம் தினம் கொல்லுதையா

அன்புக்குழந்தைக்கு என்ன செய்வோம் உன்னை
தாலாட்டிக் களிப்பூட்டக் கூடி வந்தோம்
ஆராரோ பாடவா? பிள்ளைத் தமிழ் தரவா
இசையெல்லாம் உனக்கே அர்ப்பணித்தோம்


- மலர் சின்னையா



## நல்லூரான் திருவடிக்கு

ஆடிவருமயிலேறும் ஆணழகா முருகா
எம் அவலங்கள் அத்தனையும் மண்ணினிலே மறைய
கோடி முறையுனைப் பணிந்தோம் கோமகனே மருகா
கொண்டவள்ளி தெய்வானை யுடனுறையும் மணவாளா
பாடித் துதித்துன்பாதம் பணிந்தோம் பாலகனே
- வேலவனே
பக்தர்களின் குறை தீர்க்கும் பாங்கான குமரனே
நாடி வருவோர்க்கு நலமளிக்கும் நல்லூரானே
நல்வரந்தந்தெமைக் காத்திடய்யா முருகையா.

- க.நாகேஸ்வரா



## தேரேறி வாருமையா

நல்லூர் குடி புகுந்து
நல்லோர் மனம் நிறைந்த
நாம் வணங்கும் நல்லவனே
பார் புகழும் வெற்றித் திலகமே
தேரேறி வாருமையா
எம் தேசம் செழிக்கட்டும்
நீ விழி திறந்து வாருமையா
வேதனைகள் ஓடிடட்டும்
வேலேந்தி வந்திடையா
கை ஏந்தும் ஏழைகளின்
கண்ணீர் தொலையட்டும்
மயிலேறும் மன்னவனே
தேவர் துயர் கண்டு
வேல் எடுத்து விளையாடி
அசுரர் குடி அழித்தாய்
தேவர் துயர் துடைத்தாய்
எம் துயர் தொலைய
தேரேறி வாருமையா

- எஸ்.கலாமணி

## முத்தமிழ் காவலனே

ஆனைமுகன்தம்பியே ஆறுமுகம்கொண்டவனே
ஆறுபடை வீடுடைய முருகனே கலியுக
- வரதனே
முத்தமிழ்க் காவலனே முருகையா
கொடியேற்றங் கண்டு உவக்கும் யாழ்
- நல்லூர் முருகனே மக்கள்
மிடியகற்றி நல்வாழ்வு தருவாயே அடியார்
குறை நீக்கி முறை செய் தருளுமையா
வள்ளி மணவாளனே புள்ளி மயிலேறி வந்து
- முருகா
பக்தர்க்கருள்வாய் அப்பா
மால் மருகா வேல் முருகா
வா வா சண்முகனே
வள்ளி தெய்வயானையொடு
புள்ளி மயில் ஏறிவரும் பெருமாளே

வேல்
வேல் வேல்
வேல் முருகா
வெற்றி வேல் முருகா
வடி வேல் முருகா
வேல் வேல்
வடி வேல் முருகா

-நா.நல்லதம்பி, மட்டுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




JEEVAN STUDIO
021 222 2955 / 077 978 5717
No8B,First Floor,Cargills Square,Jaffna.
www.Jeevanstudios.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org